CEMCA

# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

## CHAPTER 6 - FINANCIAL SUSTAINABILITY

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# INTERNSHIPS

## சமுதாய வானொலி நிலையங்களுக்கான நிதி ஆதாரத்தைப்பெற உதவும் வழிகள்

CHAPTER - 6

EPISODE - 29

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# சமுதாய வானொலியின் நிதி ஆதாரம்

- பணியிடை பயிற்சி
- பரிமாற்று நிகழ்ச்சிகள்
- ஆராய்ச்சி
- போட்டிகள்
- சமுதாய வானொலிக்கான நிதி

# பணியிடை பயிற்சி

- சமுதாய வானொலி, நிதி ஆதாரங்களை பணியிடை பயிற்சி வழங்குவதின் மூலம் பெறலாம்
- நம் இந்தியாவில் பல்வேறு கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்திலும் ஊடகவியல் மற்றும் வெகுசன தகவல் தொடர்பு சார்ந்த படிப்புகள் அதிகமாக காணப்படுகின்றது. இது போன்ற படிப்புகளுக்கு போதுமான பயிற்சி அளிக்க வாய்ப்பு அதிகமாக இல்லை
- சமுதாய வானொலி நிலையங்களை இந்த மாணவர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்க அனுமதிப்பதன் மூலம் அவர்களிடம் கட்டணம் வசூலிக்கலாம்
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை சமுதாய வானொலியின் செயல்பாட்டை பார்வையிட அனுமதி அளித்து அவர்களிடம் பார்வை கட்டணம் வசூலிக்கலாம்.

# பரிமாற்று நிகழ்ச்சிகள்

- பரிமாற்று நிகழ்ச்சிகளின் மூலமாக நிதியை ஒரு சமுதாய வானொலி நிலையம் பெறலாம்.
- ஒரு சமுதாய வானொலி நிலையம் அவர்களுடைய நிகழ்ச்சிகளை மற்ற வானொலி நிலையத்திடம் பகிர்ந்து கொண்டு அதற்காக அவர்களிடம் கட்டணங்களை வசூலிப்பதன் மூலம் சமுதாய வானொலிக்கு நிதி கிடைக்கிறது.
- தங்களுடைய நிகழ்ச்சிகள் பல்வேறுபட்ட சமுதாய மக்களுக்கு சென்று சேர்வது மட்டுமல்லாமல் சமுதாய வானொலி நற்பெயரும் பெறுகிறது.

# ஆராய்ச்சி மற்றும் போட்டிகள்

- அரசு மற்றும் அரசு சாரா நிறுவனத்திடம் இருந்து பெறப்படும் கணக்கெடுப்பு ஆராய்ச்சி போன்றவைகளுக்கு அவர்களிடம் நிதியினை பெறலாம்.
- போட்டிகள் நடத்துவதன் மூலம் ஒரு சமுதாய வானொலி நிலையம் தங்களுக்கு தேவையான நிதிகளை பெறமுடியும்.
- பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும், கவிij, வினாடி வினா போன்ற போட்டிகளை நடத்துவதன் மூலம் அவர்களிடம் பதிவு கட்டணம் வசூலித்து சமுதாய வானொலி நிலையத்திற்கு நிதியினை பெறமுடியும்

# சமுதாய வானொலிக்கான நிதி

- ஒரு வருடத்திற்கு 100 மணி நேரம் நிகழ்ச்சிக்கு அரசு நிதி அளிக்கிறது.
- ஒரு மணி நேரத்திற்கு ரூபாய் 2500 கொடுக்கிறது இது இல்லாமல் 75% உபகரணம் வாங்க அரசு நிதி அளிக்கிறது.
- ஜனவரி 17, 2017ல் வந்த உத்திரவின்படி வடகிழக்கு மாநிலங்களுக்கு 90% நிதி வழங்குகப்படுகிறது.
- உபகரணங்கள் வாங்குவதற்காக அரசு பல்வேறு மானியம் வழங்குகிறது.

# புதிய மற்றும் இயங்கி வரும் சமுதாய வானொலி நிலைய உபகரணங்கள் வாங்குவதற்கு மானியம் பெற தகுதிகள்.

- தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தோடு நிதி பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட சமுதாய வானொலி நிலையம் அரசு மானியம் பெற தகுதியானது.
- அரசு சாரா நிறுவனம் மற்றும் அறக்கட்டளைகள் கட்டாயம் அரசுசாரா நிறுவனத்தின் Durpan Portal of NITI Aayog ல் பதிவு செய்து தனிப்பட்ட அடையாள எண்ணைப் பெற வேண்டும்.
- அமைச்சகத்தால் பட்டியலிடப்பட்ட உபகரணங்களுக்கும் மட்டும் மானியம் வழங்கப்படும். கட்டிடம், நிலம், மின்சாரம் சார்ந்த செலவுகள், இருக்கைகள் மற்றும் மென்பொருள் சார்ந்தவைகளுக்கு மானியம் வழங்கப்பட மாட்டாது.
- ஒரு குறிப்பிட்ட உபகரணம் வாங்குவதற்கு 6 வருடத்தில் ஒரு முறை மட்டுமே மானியம் பெற தகுதியானது ஆனபோதிலும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு உபகரணங்கள் வாங்க மானியம் பெற விண்ணப்பிக்கலாம் அதிகபட்ச மானியம் 7.5 லட்சம் ஆகும்.

# வாங்கப்பட்ட உபகரணத்திற்கு மானியம் பெற வழிகள்

- தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திடம் இருந்து முன்கூட்டிய அனுமதி அவசியம் இல்லை சமுதாய வானொலி நிலையம் அமைத்து மூன்று மாதங்கள் செயல்பாட்டிற்கு பிறகு தகுதியான அமைப்புகள் நிதி பெறுவதற்கு அதற்குரிய படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.
- வாங்கிய மற்றும் நிறுவப்பட்ட உபகரணத்திற்கு நிதியை பெற உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் கிடைத்த உடனே அமைச்சகம் கள ஆய்வை மேற்கொள்ள ஒரு நபரை அமர்த்தி அந்த கள ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட சமுதாய வானொலி நிலையத்தின் கட்டமைப்பு உபகரண வசதி போன்றவை குறித்து ஆய்வு அறிக்கையை தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திடம் சமர்ப்பிப்பார்.
- தகவல் மற்றும் ஒலிபரப்பு இணை செயலாளர் ஆய்வு அறிக்கைக்கு அனுமதி வழங்கிய பிறகு வாங்கப்பட்ட உபகரணத்திற்கு மானியம் வழங்கப்படும்.

# முன்னுரிமை யாருக்கு?

- நம் நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை.
- அடுத்ததாக அரசு மற்றும் மக்களிடமிருந்து மானியம் பெறாத விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ஆனால் மக்களிடம் இருந்து நிதி பெற்றிருந்தால் முன்னுரிமை வழங்கப்பட மாட்டாது.
- **LWE** ஆதிக்கம் உள்ள மாவட்டங்களுக்கு முன்னுரிமை.
- பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# நெருக்கடி நிலை மானியம்

- பூகம்பம் புயல் போன்ற இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் சேதங்களை சரி செய்ய நிதி உடனடியாக வழங்கப்படும் இது உபகரணங்களை மாற்றுவதற்கு மட்டுமே வழங்கப்படும்.
- இயற்கை சீற்றத்தால் பாதித்த சமுதாய வானொலி நிலையம் உடனடியாக தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திடம் தெரிவிக்க வேண்டும்.
- அருகில் உள்ள அகில இந்திய வானொலி நிலையம் அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபர் ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பிப்பார்.
- தகவல் மற்றும் ஒலிபரப்பு செயலாளர் அனுமதி வழங்கினால் மட்டுமே நிதியை பெற முடியும். அதிகபட்சமாக 75 சதவீதம் மானியம் வழங்கப்படும்.